

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஆகஸ்டு 23, 2018 | புரட்சி 17 | முழக்கம் 32 | விலை: ரூ.3.00


## தமிழர் கல்வி உரிமை மீட்புப் பரப்புரை

# கழக அணிகளின் பயணம் புறப்பாடு!

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தமிழர் கல்வி உரிமை மீட்புப் பரப்புரைப் பயணம் எழுச்சியுடன் தொடங்கியது. 20ஆம் தேதி சென்னை, மேட்டூர், மயிலாடுதுறை குழுக்கள் பயணத்தைத் தொடங்கின. 21ஆம் தேதி குடியாத்தம், திருப்பூர், சங்கரன்கோயில் பயணக் குழுக்கள் பயணத்தைத் தொடங்கின. முன்னதாக சென்னை பயணக் குழுவின் தொடக்க விழா பொதுக் கூட்டம் ஆகஸ்டு 19 ஆம் தேதி மாலை 6 மணியளவில் திருவல்லிக்கேணி சேக்தாவூது தெருவில் அருண்குமார் தலைமையில் சி.இலட்சு மணன் முன்னிலையில் ப. பிரபாகரன் வரவேற்புரையுடன் தொடங்கியது.

கலைஞர் நினைவு அரங்கம் என்று மேடைக்கு பெயர் சூட்டப்பட்டிருந்தது. கலைஞர் உருவப் படத்தைப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் திறந்து வைத்தார். மாவட்ட செயலாளர் இரா. உமாபதி தொடக்க உரையைத் தொடர்ந்து ‘விரட்டு’ கலை பண்பாட்டுக் குழுவினரின் பறை இசையோடு நிகழ்ச்சிகள் தொடங்கின. சமூக நீதி காத்த தலைவர்கள் பெரியார், அம்பேத்கர் பாடல்கள், கல்வி உரிமைப் பயண நோக்கங்களை விளக்கம் பாடல்களைத் தொடர்ந்து ‘நீட்’ தேர்வின் பாதிப்பு களையும் தமிழ்நாட்டில் மத்திய அரசுப் பணிகளில் வடநாட்டுக்காரர்கள் திணிக்கப் படுவதையும் மக்களிடம் உணர்ச்சி பூர்வமாக விளக்கும் நாடகங்களை குழுவினர் நடத்தினர். கலை நிகழ்வுகளை மக்கள் கைதட்டி வரவேற்றனர்.

தொடர்ந்து மனிதநேய மக்கள் கட்சி பொதுச் செயலாளர் அப்துல் சமது உரையாற்றினார். “ஒரு இயக்கம் உயிர்த் துடிப்போடு இருக்கிறது என்பதற்கு அடையாளம் அது தொடர்ந்து இயங்கிக் கொண்டு இருப்பதேயாகும். பெரும் எண்ணிக்கை இருந்தால் மட்டும் போதாது. திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து இத்தகைய மக்களை சந்திக்கும் பரப்புரை இயக்கங்களை நடத்தி வருகிறது. அவ்வப் போது சமுதாயத்துக்கு அவசியமான கருத்துகளை மக்களிடம் எடுத்துச் சொல்லி விழிப்புணர்வை ஊட்டி வருகிறார்கள். திராவிடர் விடுதலைக் கழகம் தேர்தலில் போட்டியிடுகிற கட்சி அல்ல; சமுதாயத்துக்காக உழைக்கும் இயக்கம். இந்த இயக்கத்தில் உழைக்கும் தோழர்களை உளப்பூர்வமாக பாராட்டுகிறேன். இஸ்லாமியர்கள் கூட இந்த இயக்கத்தை ஏதோ கடவுள் மறுப்பு இயக்கமாக மட்டுமே பார்க்கிறார்கள். இந்தியா விலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இங்கே இஸ்லாமியர் சமூகப் பாதுகாப்புடன் வாழ முடிகிறது என்றால், அது பெரியாரும் அவர் தொடங்கிய திராவிட இயக்கமுமே காரணம் என்பதை ஒவ்வொரு இஸ்லாமியரும் நன்றியுடன் நினைத்துப் பார்க்க வேண்டும். கலைஞரை நாம் அரவணைக்க வேண்டும் என்பதற்கு ஒரே ஒரு காரணம் மட்டுமே போதும். பார்ப்பனர்கள் அவர் மறைவுக்குப் பிறகும் அவரை மெரினாவில் அடக்கம் செய்யக் கூடாது என்று வெறுப்பைக் காட்டு கிறார்கள். பார்ப்பனரின் இந்த வெறுப்புக் காகவே கலைஞர் நமது நட்புக்கும் அரவணைப்புக்கும் உரிய தலைவராகி விடுகிறார்” என்று கூறி, தொடர்ந்து சங்பரிவார் ஆட்சியில் இஸ்லாமியர் களுக்கு எதிராக நடக்கும் அடக்குமுறை களையும், வடநாட்டுக்காரர்களை தமிழ் நாட்டுக்குள் வேலைகளில் திணிப்பதையும் கண்டித்துப் பேசினார்.

இறுதியாக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து பெரியார் இயக்கம் நடத்திய போராட்டம், காமராசரின் சமூகநீதித் திட்டங்கள், கலைஞரின் சமூகநீதி திராவிட இயக்கக் கொள்கைகளை செயல்படுத்துவதில் காட்டிய உறுதி, நடுவண் ஆட்சியின் மக்கள் விரோதக் கல்விக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்.

### பயணத்துக்கு பக்தர்கள் இன உணர்வாளர்கள் பேராதரவு

பரப்புரைப் பயணத்தில் ‘நீட்’ பாதிப்புகளையும் தமிழ்நாட்டின் மத்திய அரசுத் துறைகளில் வடநாட்டார் குவிக்கப்படுவதையும் மக்கள் பேராதரவுடன் வரவேற்கிறார்கள். துண்டறிக்கைகளை, நூல்களை ஆர்வத்துடன் வாங்கிச் செல்கிறார்கள்.





மடிப்பாக்கம் பேருந்து நிலையத்தில் சென்னைக் குழு பரப்புரை செய்தபோது நெற்றி முழுதும் விபூதி-குங்குமம் அணிந்த தோழர், ஆர்வத்துடன் சைக்கிளில் வந்து இறங்கி கழக வெளியீடுகளை வாங்கி தோழர்களின் கரங்களைப் பிடித்து பாராட்டினார்.

அதேபோல் காஞ்சிபுரம் மாவட்டம் கண்டிகையில் பரப்புரை முடிந்து தோழர்கள் பயணப்பட்ட பிறகு, ஒரு தோழர் மோட்டார் சைக்கிளில் வேகமாகப் பின் தொடர்ந்து வந்து வாகனத்தை நிறுத்தி ரூ.500 நன்கொடை வழங்கினார்.




சென்னை




மேட்டூர்



திருப்பூர்



குடியாத்தம்



மயிலாடுதுறை



சங்கரன்கோயில்

*சமூக நீதியை சிதைக்கும் ‘நீட்’*

## அரசுப் பள்ளி மாணவர் 4 பேருக்கே அரசு மருத்துவக் கல்லூரிகளில் இடம்

‘நீட்’டின் மற்றொரு கோர முகம் வெளிப்பட்டிருக்கிறது. இவ்வாண்டு தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் படித்த 4 மாணவர்களுக்கு மட்டுமே தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைத்திருக்கிறது. கடந்த ஆண்டு இடம் கிடைத்தவர்கள் இரண்டு பேர். ஆக 100 சதவீதம் அதிகரித்துவிட்டது என ‘புள்ளி விவரப் புலிகள்’ மார் தட்டலாம். ஆனால் எதார்த்தம் மிக மிக மோசம்.

தமிழ்நாட்டில் தான் இந்தியாவிலேயே மிக அதிக எண்ணிக்கையில் 26 அரசு மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. இவற்றின் மொத்த இடங்கள் 5660. இதில் அரசுப் பள்ளியில் படித்த பெரும் பொருட் செலவில் தனியார் பள்ளிகளில் படிக்க வாய்ப்பில்லாத மாணவர்கள் பெற்ற இடம் இவ்வளவுதான். ‘நீட்’ தேர்வு வருகைக்கு முன்பு 2016 இல் 30 அரசுப் பள்ளி மாணவர்கள் இடம் பிடித்தனர்.

இப்போது தமிழில் ‘நீட்’ தேர்வு எழுத எதிர்ப்பும் கண்டனங்களும் வெடித்தப் பிறகே சி.பி.எஸ்.ஈ. அனுமதித்தது. அதிலும் 49 கேள்விகள் தவறானவை. மாணவர்கள் விடையளிக்க முடியாததால் சுமார் 25,000 மாணவர்கள் தமிழில் தேர்வு எழுதி சுமார் 400 பேர் மட்டுமே ‘நீட்’டில் தேர்ச்சி பெற முடிந்தது.

நீட் தேர்வுக்கு முன்பு மருத்துவக் கல்லூரியில் சேரும் தகுதி மதிப்பெண் பெற்ற மாணவர்களில் இப்போது 80 சதவீதம் சரிந்து விட்டது என்று மருத்துவக் கல்லூரி மாணவர் தேர்வுக் குழு வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வருகிறது. அரசு நிதி உதவியுடன் செயல்படும் தனியார் பள்ளிகளிலிருந்து ‘நீட்’டில் தேர்ச்சிபெற்று, அரசு மருத்துவக் கல்லூரிகளில் நுழையும் வாய்ப்பு பெற்றவர்கள் இப்போது 26 பேர்.

‘தனியார் கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் பெரும் தொகையை நன்கொடையாகக் கட்டிப் படிக்க வாய்ப்பில்லாதவர்கள் – அதேபோல நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் பெரும் தொகையைக் கட்டணமாக செலுத்த முடியாதவர்கள் ‘நீட்’டில் தேர்ச்சி பெற்றிருந்தும் சேர முடியாமல் புறந்தள்ளப்பட்டிருக்கிறார்கள்’ என்கிறார், சமூக சமத்துவ சங்கத்தின் பொதுச் செயலாளர் மருத்துவர் இரவீந்திரநாத். அரசுப் பள்ளி ஒன்றில் உயிரியல் ஆசிரியரான காமாட்சி என்பவர் கூறும்போது, “அரசுப் பள்ளி மாணவர்களை தமிழில் நீட் தேர்வு எழுத ஊக்குவித்தோம்; 49 கேள்விகள் குளறுபடிகளால், தேர்ச்சி பெற முடியவில்லை. உயர்நீதிமன்றம் 196 மதிப்பெண்களை இவர்களுக்குக் கூடுதலாக வழங்க உத்தரவிட்டும், சி;பி.எஸ்.ஈ. உச்சநீதிமன்றத்தில் தடை வாங்கிவிட்டது” என்றார்.

69 சதவீத இடஒதுக்கீடு பாதிக்கப்படவில்லையே என்று ‘நீட்’ ஆதரவாளர்கள் இதற்கு பதில் கூறுகிறார்கள். ஆனால், 69 சதவீத இட ஒதுக்கீட்டில் புறக்கணிக்கப்பட்ட வசதி வாய்ப்பற்ற கிராமப்புற மாணவர்களுக்கு நீதி கிடைத்ததா என்பதே அடிப்படையான கேள்வி.

பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும் திறந்த நமது கடந்தகால ஆட்சிகளில் அதில் படிக்க வரும் மாணவர்களுக்கு கல்வியை இலவசமாக்கியதும், உதவித் தொகை வழங்கியதும், சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்ததும் எதற்காக? இடஒதுக்கீடு எண்ணிக்கையில் இருந்தால் மட்டும் போதாது. அது அடித்தள கிராமப்புற மாணவர்களுக்கு சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் தானே?

“நுழைவுத் தேர்வு முறை வேண்டாம்; பிளஸ் டூ மதிப்பெண் மட்டுமே போதும் என்று முடிவெடுத்தது ஏன்? அது கிராமப்புற மாணவர்களுக்குத் தடையாக இருக்கிறது என்பதால்தானே? கலைஞர் ஆட்சியில் கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவீத இடஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டதும் பிறகு ஜெயலலிதா ஆட்சியில் இது 25 சதவீதமாக உயர்த்தப்பட்டதும் இடஒதுக்கீட்டின் பயன். தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமூகத்துக்குள்ளேயே பாதிக்கப்பட்ட சமூகத்துக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துக்குத் தானே! முதல் தலைமுறையாக பட்டம் படிக்க வரும் மாணவர் அவர் முன்னேறிய சமூகத்தினராக இருந்தாலும் 5 கூடுதல் மதிப்பெண் வழங்கும் முறையை கலைஞர் கொண்டு வந்தாரே, ஏன்? முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு கல்லூரிக் கதவுகள் திறக்கப்பட வேண்டும் என்பதால்தானே? (இந்த கிராமப்புற, முதல் பட்டதாரி மாணவர்களுக்கான அரசு ஆணைகளை உயர்நீதிமன்றம் இரத்து செய்தது என்பது வேறு பிரச்சினை) 69 சதவீத இடஒதுக்கீடு மறுக்கப்படவில்லை என்று வாதாடுகிறவர்கள், அதில் மறுக்கப்படும் சமூக நீதியை மறைக்கிறார்கள் என்பதற்காகவே இந்த விவரங்களை எடுத்துக் காட்டுகிறோம்.

நடப்பாண்டான 2018 ஆம் ‘நீட்’டில் தேர்ச்சி பெற்று அரசு மருத்துவக் கல்லூரிகளில் இடம் பிடித்தவர்களில் 52 சதவீதம் பேர் ‘பிளஸ் டூ’ தேர்ச்சிக்குப் பிறகு ஓராண்டு படிப்பை நிறுத்தி ‘நீட்’டுக்காக தனிப் பயிற்சி பெற்றவர்கள் தான் என்ற தகவலை தேர்வுக் குழு செயலாளர் ஜி. செல்வராஜ் கூறியிருக்கிறார்.

பட்டியல் இனப் பிரிவைச் சார்ந்த அரசுக் கல்லூரியில் இடம் பெற்றுள்ள ‘நீட்’டில் கடைசி மதிப்பெண் வரிசையில் உள்ள மாணவரின் நீட் மதிப்பெண் 200; கடந்த ஆண்டு இது 161 ஆக இருந்தது. ‘நீட்’டில் கடும் போட்டிகளை பட்டியல் இனப் பிரிவு மாணவர்களே சந்திக்க வேண்டியிருக்கிறது.

பெரும் பொருள் செலவில் அதிநவீன பயிற்சி மய்யங்களைத் தேர்வு செய்து ‘நீட்’ பயிற்சி பெற்றவர்கள் கூடுதல் மதிப்பெண்களைப் பெற முடிகிறது என்பதே எதார்த்தம்.

உதாரணமாக 2018 இல் நீட்டில் முதலிடம் பெற்ற மதிப்பெண் 676. 2017 இல் முதலிடத்தில் வந்தவர் பெற்ற மதிப்பெண்ணைவிட 20 அதிகம். நீட்டில் 550க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள், 2017 மற்றும் 2018 இல் 81 பேர். இதற்குக் கீழே போனால் நிலைமை மறுக்கிறது. 500க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் 2017 இல் 203 என்றால், 2018 இல் இந்த எண்ணிக்கை 213தான். அதேபோல் 2017 இல் 400க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் 1279 பேர். இப்போது 2018 இல் 1466 பேர். நீட்டில் 300க்கு மேல் பெற்றவர்கள் 2017 இல் 2569. 2018 இல் 4791 பேர். மதிப்பெண் வரிசை குறைய குறைய இரண்டு ஆண்டுகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான மதிப்பெண் இடைவெளி அதிகரிக்கிறது. மிகக் கூடுதல் மதிப்பெண் பெறுவோரிடையே எண்ணிக்கை இடைவெளி குறைவாக இருக்கிறது.

2017 மற்றும் 2018ஆம் ஆண்டு ‘நீட்’ தேர்வை ஒப்பிட்டுப் பார்க்கும்போது ‘நீட்’டில் மிக அதிக மதிப்பெண் பெற்றவர்கள், மேலும் அதிக மதிப்பெண் பெறுவதையும், குறைந்த மதிப்பெண் பெற்று ‘நீட்’டில் தேர்வு பெற்றவர்களைவிட அதிக ‘இடைவெளி’ வேறுபாடுகள் இருப்பையும் காண முடிகறிது.

ஆக, சமூகத்தில் மிகவும் பின்தங்கிக் கிடக்கும் ஏழை கிராமப்புற மாணவர்களுக்கான மேல் தட்டு நகர்ப்புற வசதி படைத்த மாணவர்களுக்குமான ஏற்றத் தாழ்வுகளை நிலைப்படுத்தவே ‘நீட்’ துணை போய்க் கொண்டிருக்கிறது. வரும் ஆண்டுகளில் இந்த இடைவெளி அதிகரித்துக் கொண்டே போய் சமூக நீதியின் நோக்கத்தையே ‘நீட்’ உருக்குலைத்துவிடும் ஆபத்து உள்ளது.

**(தகவல்: ‘டைம்ஸ் ஆப் இந்தியா’, ஆக.21)**

## தபோல்கர் கொலை: மதவெறியர் கைது

## மூடநம்பிக்கை ஒழிப்பு இயக்கம் மராட்டியத்தில் வேகம் பெறுகிறது

2013ஆம் ஆண்டு பகுத்தறிவாளர் டாக்டர் தபோல்கரை சுட்டிக் கொன்ற ‘சிவசேனை’ முன்னாள் கவுன்சிலர் கைது செய்யப்பட்டுள்ளார். மகாராஷ்டிராவில் நடப்பது இந்துத்துவ பாசிச கொள்கைகளை ஏற்றுக் கொண்ட சிவசேனை ஆட்சி என்பது குறிப்பிடத்தக்கது. கவுரி லங்கேஷ் படுகொலையைத் தொடர்ந்து கருநாடக அரசு மேற்கொண்ட தீவிரப் புலனாய்வு காரணமாக இதுவரை சிக்காமல் பதுங்கி நின்ற ‘சங்பரிவார்’ குடும்பங்கள் சிக்கத் தொடங்கியுள்ளன. இத்தகைய படுகொலைகளை நடத்தும் ‘சங்பரிவார்’ கொள்கையாளர்கள் ஒவ்வொரு வன்முறை நிகழ்த்தும் போதும் ஏதேனும் ஒரு புதிய இந்துத்துவா பெயரை சூட்டிக் கொள்வது வழக்கம். காந்தி கொலையில் கோட்சே கும்பல் இதே தந்திரத்தைத்தான் பின்பற்றியது. அவரைத் தொடர்ந்து அதே மாநிலத்தைச் சார்ந்த கோவிந்த் பன்சாரே 2015 பிப்ரவரியில் கோலாம்பூரில் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் இந்துத்துவா எதிர்ப்பாளர். மாவீரன் சிவாஜியின் உண்மையான வரலாற்றை தாய்மொழியில் நூலாக எழுதியவர்.

2015 ஆகஸ்ட்டில் கருநாடக மாநிலத்தைச் சார்ந்த முன்னாள் துணைவேந்தரும் சிறந்த இலக்கியவாதி யுமான முனைவர் கல்புர்கி சுட்டுக் கொல்லப்பட்டார். வீட்டுக்குள்ளேயே மாணவர்போல் சந்திக்க வந்து நேருக்கு நேர் சுட்டுக் கொன்றான் கொலையாளி. 14ஆம் நூற்றாண்டு சமூக சீர்திருத்தவாதி, பார்ப்பன எதிர்ப்பாளர் பசவண்ணாவின் கருத்துகளை ஏற்று பல்வேறு மொழிகளில் மொழி பெயர்த்தவர்.

2017இல் இதேபோல் இந்துத்துவாவை எதிர்த்துப் போராடி வந்த கவுரி லங்கேஷ் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைகளில் ஒரே ரக துப்பாக்கியும் துப்பாக்கிக் குண்டுகளும் பயன்படுத்தப்பட்டது கண்டறியப்பட்டு கவுரி லங்கேஷ் கொலையில் முக்கிய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தந்த தகவலின் அடிப்படையில் தபோல்கர் கொலையிலும் துப்பு துலங்கியுள்ளது. சிவசேனையின் முன்னாள் கவுன்சிலர் ஸ்ரீகாந்த் பங்கார்கர் என்பவரை மகராஷ்டிரா காவல்துறை ஆக. 18ஆம் தேதி இரவு கைது செய்தது. அதேபோல் தபோல்கரை துப்பாக்கியால் சுட்டதாகக் குற்றம்சாட்டப்படும் பிரகாஷ்ராவ் கள்ளூர் புனேவில் கைது செய்யப்பட்டுள்ளார். நடைபயிற்சி சென்ற தபோல்கரை 2013 ஆகஸ்ட் 20ஆம் தேதி இரு சக்கரவண்டியில் பங்கார்கர் பின்னால் அமர்ந்திருக்க, தான் (பிரகாஷ் ராவ்) தபோல்கரை சுட்டுக் கொன்றதாக வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

“தபோல்கர் சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு அவர் தொடங்கிய ‘மகாராஷ்டிரா அந்தா ஷ்ரத்தா நிர்மூலன் சமிதி’ என்ற மூடநம்பிக்கை ஒழிப்பு இயக்கம் வேகமாகப் பரவி வருகிறது” என்று தபோல்கர் மகன் அமீத் கூறியுள்ளார். இப்போது 36 மாவட்டங்களில் 5000 முழு நேர ஊழியர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறோம்; பிற மாநிலங்களிலிருந்தும் எதிர்பாராத முகாம்களிலிருந்தும் ஆதரவு பெருகி வருகிறது என்றும், முகநூல் வழியாக 80,000 பேர் பின்தொடர்ந்து வருகிறார்கள் என்றும் கூறினார்.

### நன்கொடை

கோவை அண்ணாமலை அரங்கில் நடைபெற்ற நிகழ்வில் வெங்கட் - இராஜேஸ்வரி இணையரின் குழந்தைக்கு “அறிவுக் கனல்” என கழகத் தலைவர் கொளத்தூர் மணி பெயரிட்டார். அதன் நினைவாக இயக்க நிதியாக ரூ. 1000 கொடுத்தனர்.

# தஞ்சை மாவட்டத்தில் பார்ப்பன–பண்ணையார் ஆதிக்கம்–முடிவுக்கு வந்தது எப்படி?

**அசோகா பல்கலைக்கழகமும் (டெல்லி), அம்பேத்கர் பல்கலைக்கழகமும், திராவிடியனிஸம் என்ற தலைப்பில் சென்ற ஜனவரி மாதம் ஒரு கருத்தரங்கை ஒழுங்கு செய்திருந்தார்கள். இந்தக் கருத்தரங்கம் திராவிட இயக்கம் தோன்றி ஒரு நூற்றாண்டு ஆனதையொட்டி ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது. அக்கருத்தரங்கில் பேராசிரியர் ஜெயரஞ்சன் வாசித்த கட்டுரையின் சுருக்கம்.**


தமிழகம் ஒரு முன்னேறிய மாநிலமாகச் சமீப காலங்களில் அங்கீகரிக்கப்பட்ட போதும், நிலச் சீர்திருத்தம் இம்மாநிலத்தில் சரிவரச் செயல்படுத்தப் படவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு ஒரு சாரரால் தொடர்ந்து முன்வைக்கப்படுகிறது. இக்குற்றச் சாட்டின் அடிப்படையில் நோக்கினால், நிலப் பிரபுத்துவம் தமிழகத்தில் தொடர்கிறது என்றுதான் எவரும் ஊகிப்பர். அதன் விளைவாகப் பெரும்பான்மையான சாகுபடி நிலங்கள் குத்தகைக்கு அடைக்கப்பட்டும் வேளாண் வருமானத்தில் பெரும் பகுதி குத்தகையாக வசூலிக்கப்படும் சூழலும் நிலவ வேண்டும். குறிப்பாகக் காவிரி டெல்டா போன்ற செழிப்பான பகுதிகளில் இத்தகைய நிலச் சுவான்தார் முறை உக்கிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், நடைமுறை என்ன? நிலப் பிரபுத்துவம் பெருமளவு காணாமல் போனது. குத்தகை முறையும் பெரும் மாற்றத்தைச் சந்தித்து குத்தகைதாரரின் நிலை மிக முன்னேற்றம் கண்டுள்ளது. நிலச் சுவான்தார்களுக்கும் குத்தகை தாரர்களுக்கும் இடையேயான அதிகார உறவு முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டுவிட்டது. குத்தகைதாரர் தனது உரிமைகளை நிலைநாட்ட முடியும் சூழல் நிலவுகிறது. அதன் வாயிலாகத் தனது சாகுபடி உரிமையை விட்டுவிடக் கணிசமான இழப்பீடு பெற முடியும்.

இது எப்படிச் சாத்தியமாயிற்று? இடது சாரிகளும் திராவிட இயக்கத்தாரும் விவசாயிகளை அணி திரட்டிப் போராடியதால் கிடைத்த வெற்றி இது. இப்போராட்டங்களின் விளைவாக நிலப் பிரபுத்துவத்தின் அதிகாரம் தகர்க்கப்பட்டது. உழவர்களின் உரிமை நிலை நிறுத்தப்பட்டது. 1967இல் ஆட்சியைப் பிடித்த திமுக நடு, கீழ் சாதி குத்தகைதாரர்களின் அதிகாரத்தைக் கூடுதலாக்கி யதன் வாயிலாக இதனைச் சாத்தியமாக்க முடிந்தது. இதுமட்டுமல்லாது இத்தகைய குத்தகைதாரர்கள் ஒருங்கிணைந்து போராடத் தோதான சட்டங் களையும் திமுக இயற்றியது. இதன் விளைவாக நிலப் பிரபுக்கள், குறிப்பாகப் பார்ப்பன நிலச் சுவான் தார்களுக்கு எதிராக உழவர்கள் ஒருங்கிணைந் தார்கள். இந்த வரலாறு நெடியது. அதனுடைய வரலாற்றை உற்று நோக்கினால் வர்க்கம் மற்றும் சாதியப் போராட்டங்கள் பின்னிப் பிணைந்து இந்த மாற்றத்தை ஏற்படுத்தியது புலப்படும்.

எனது ஆய்வுக்காக நான் காவிரி டெல்டா பகுதியைத் தேர்ந்தெடுத்தேன். அப்பகுதி மிகவும் பழைமைவாய்ந்தது. கால ஓட்டத்தின் விளைவாக அங்கு மிகவும் சிக்கலான உற்பத்தி உறவுகள் உருவாகியிருந்தன. குத்தகை முறையை எடுத்துக் கொண்டால் இரண்டு வகை இருந்தன. நிலையான அளவில் நில உடைமையாளர்களுக்கு நெல் அளப்பது என்பது குத்தகை முறை. எடுத்துக் காட்டாக, ஏக்கருக்கு 10 மூட்டை நெல் என்றால் அது குத்தகை. எவ்வளவு விளைந்தாலும் விளையாவிட்டா லும் குத்தகை சாகுபடி செய்பவர் இதனைக் கொடுக்க வேண்டும். மற்றொரு முறை பங்கு சார்ந்தது. விளைச்சலில் ஒரு குறிப்பிட்ட பங்கு நில உடைமையாளருக்குக் கொடுக்க வேண்டும். 10 மூட்டை விளைகிறது என்றால் அதில் சரி பாதி 5 மூட்டை பெறுவார். விளைச்சல் 8 மூட்டையாகக் குறைந்தால் அவரின் பங்கு 4 மூட்டைகளாகிவிடும். இந்த முறைக்கு ‘வாரம்’ என்று பெயர். காவிரி டெல்டா பகுதியில் குத்தகை, வாரம் என்ற இரண்டு முறைகளுமே புழக்கத்தில் இருந்து வந்தன. 1952ஆம் ஆண்டு டெல்டாவில் ஆய்வு மேற்கொண்ட காதலீன் காஃப் என்ற ஆய்வுப் பேராசிரியர் சாகுபடிச் செலவுகள் போக, குத்தகைதாரர் பெற்ற பங்கு 7 - 10 விழுக்காடு அளவே எனக் கண்டார். இந்நிலை மேலத்தஞ்சைப் பகுதியில் நிலவியது.

இத்தகைய சுரண்டல் நிலைக்கு எதிர் வினையாக

**பேராசிரியர் ஜெயரஞ்சன்**



*1943ஆம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி விவசாயச் சங்கத்தைத் தஞ்சை மாவட்டத்தில் நிறுவியது. அதற்கு முன்பு அக்கட்சி தீவிரவாதப் போராட்டங் களை முன்னெடுத்து வந்தது. அதன் பின்னர் ஜன நாயக முறையில் தொழிற்சங்கங்களைக் கட்டமைத்து உழைப்போர் உரிமைக்காகப் போராட்டங்களை முன்னெடுத்தது. இதே காலகட்டத்தில் இப்பகுதியில் திராவிடர் கழகம் முன்னெடுத்த அணிதிரள்கள் ஆய்வு அறிஞர்களின் கவனத்தைப் பெறாமல் போனது.*

*(தியாகி சீனிவாச ராவ் - கீழ்த்தஞ்சை விவசாயத் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து முன்னெடுத்துச் சென்றவர்)*

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி காவிரி டெல்டா பகுதியில் வேர் விட்டு வளரத் தொடங்கும் முன்னரே பட்டியல் சாதியினர் மீது பார்ப்பனர் அமைப்பு கட்டவிழ்த்துவிட்ட அடக்குமுறைக்கு எதிராகப் பெரியார் குரல் எழுப்பிவந்தார். திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம் ஒன்றை பெரியாரின் திராவிடர் கழகம் தொடங்கி நடத்தி வந்தது. இந்தச் சங்கம் கீழ்த்தஞ்சைப் பகுதியில் வலிமையுடன் வளர்ந்து வந்தது.

எடுத்துக்காட்டாக, கீழ்வேளூர் பகுதியில் இச்சங்கத்தில் 50,000 உறுப்பினர்கள் இருந்தனர். இச்சங்கம் தலித் தொழிலாளர்களின் உரிமைகளுக் காகத் தொடர்ந்து போராடியதால் நிலச்சுவான்தார் களுடன் மோதல் ஏற்பட்டது. சிறிது காலத்திற்குப் பின் நாகைப் பகுதி திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம் கம்யூனிஸ்ட் கட்சியோடு இணைந்தது. திமுக 1967இல் ஆட்சியைப் பிடித்த பின் இத்தகைய போராட்டங்களில் குத்தகைதாரர்களின் கை ஓங்கியது. ஒடுக்கப்பட்ட சாதியினர் அரசியல் வலு கூடியது ஒரு பக்கமென்றால் திமுக அரசும் சாதகமான சட்டங்களை இயற்றியது.

அதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சியும் பல சட்டங்களை நிறைவேற்றிய போதும், குத்தகைதாரர்களின் உரிமை வலுவாக நிலைநாட்டப்பட்டது திமுக அரசு கொண்டுவந்த சட்டங்களினால்தான். Tamil Nadu Cultivating Tenants (Special Provision) Act, 1968 என்ற சட்டம் குத்தகைதாரர் தவணை முறையில் குத்தகையைச் செலுத்த அனுமதித்தது. அதற்கு முன்பு இருந்த குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டங்கள் வலுவற்றவையாக இருந்தமைக்கு முக்கியக் காரணம் குத்தகைதாரர்கள் கண்டறியப்பட்டுப் பதிவு செய்யப்படவில்லை என்பதே. The Tamil Nadu Agricultural Lands (Record of Tenancy Rights) Act, 1969, இக் குறையை நீக்கியது. குத்தகைதாரர்கள் பதிந்து கொள்வதை மிகவும் சுலபமாக்கியது. ஏறத்தாழ ஐந்து லட்சம் குத்தகைதாரர்கள் பதிவு பெற்றனர். தஞ்சையில் மட்டும் ஏழு லட்சம் ஏக்கர் நிலம் குத்தகை நிலங்களாகப் பதியப்பட்டன. 1979ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஒரு சட்டத் திருத்தம் குத்தகையின் வரம்பை 25% ஆகக் குறைத்தது. மேலும் இடர்காலங்களில் குத்தகை செலுத்தப்படா விட்டாலும்கூட குத்தகைதாரரை நீக்க முடியாத பாதுகாப்பையும் இச்சட்டம் வழங்கியது.

1971ஆம் ஆண்டு மற்றுமொரு சிறப்பான சட்டம் நிறைவேற்றப்பட்டது. Conferment of ownership of Homestead Act என்ற சட்டமே அது. இச்சட்டம் நிலச் சுவான்தார்களின் பிடியிலிருந்து நிலமற்றோரை மீட்டது. 1972ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட மற்றொரு சட்டம் அதுவரை வராமலிருந்த குத்தகை பாக்கியைத் தள்ளுபடி செய்தது. இவ்வாறு திமுக ஆட்சிக்கு வந்தபின் விவசாய தொழிலாளர்களையும், குத்தகைதாரரையும் காக்கும் பல சட்டங்கள் இயற்றப்பட்டுச் செயல்படுத்தப்பட்டன. குத்தகை தாரர் பதிவு சட்டம், குத்தகை பாக்கி தள்ளுபடி, வருவாய் நீதிமன்றங்களின் எண்ணிக்கை உயர்வு, குத்தகைக்குப் பெற்ற நிலத்தை வாங்கும் உரிமை, குடி யிருக்கும் அடிமனை சொந்தமாக்குதல் ஆகியவற்றால் நில உடைமையாளர்களிடம் பேரம் பேசும் அதி காரத்தை குத்தகைதாரர்கள் வலுவாகப் பெற்றனர்.

இரண்டு திராவிட கட்சிகளும் காலப்போக்கில் வலுப்பெற்றபோது பிற்படுத்தப்பட்ட சாதியினரின் வலுவும் கூடியது. மேலத் தஞ்சையில் கள்ளர்கள் (பிற்படுத்தப்பட்ட சாதியினர்) வலுப்பெற்றனர். இச்சாதியினரைச் சேர்ந்தவர்களே இரண்டு திராவிட கட்சிகளிலும் பொறுப்பில் பெரும்பாலும் இருந்தனர். இந்நிலை கடந்த 50 வருடங்களாகத் தொடர்கிறது. அச்சாதியினரைச் சேர்ந்தவர்களே மாநில, ஒன்றிய அமைச்சர்களாகவும் இருந்து வருகின்றனர் (ஓரிரு சந்தர்ப்பங்கள் தவிர்த்து). அரசின் நிர்வாகம் அச்சாதியினரின் கட்டுப்பாட்டில்தான் இம்மாவட்டத்தில் இயங்கி வருகிறது. இதன் விளைவாகத் தகராறுகளின்போது பஞ்சாயத்து செய்வதில் இச்சாதியினர் கூடுதல் அதிகாரம் செலுத்துகின்றனர். பார்ப்பன நில உடைமை யாளர்கள் முன்பு இருந்ததுபோல் தங்களது உயர்ந்த சாதி பலத்தால் தங்கள் குத்தகைதாரர்களையும் விவசாய தொழிலாளர்களையும் கட்டுப்படுத்த முடியாமல் போனது.

தற்போதைய நிலையை நோக்கினால் தெளிவாகப் புலப்படும் செய்திகளில் ஒன்று முன்பு இருந்தது போன்று பார்ப்பன ஆதிக்கம் அறவே இல்லை. இதுதான் அநேகமாக எல்லாக் கிராமங்களின் நிலையும். பார்ப்பனர்கள் தங்கள் நிலங்களைக் கிடைத்த விலைக்கு விற்றுவிட்டோ அல்லது சொற்ப விலைக்கு தங்கள் குத்தகைதாரரிடமே வேறு வழியின்றி விற்றுவிட்டு வெளியேறியுள்ளனர். கம்யூனிஸ்டு மற்றும் திராவிட கட்சிகளின் செயல்பாடுகளால் நிலப்பிரபுத்துவ அமைப்பு பழங்கதையாய் போனது. சட்டங்கள், அரசியல், சமூக மாற்றங்களால் நிலச்சுவான்தார்கள் தங்கள் மேலாதிக்கத்தையும், நிலத்தையும் இழந்தனர். ஆதீனங்களும், மடங்களும் நிலத்தை இழக்காத போதும் மேலாதிக்கத்தை முற்றிலும் இழந்தனர்.

ஆதீன, மட நிலங்கள் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதால் குத்தகைதாரர்களை வெளியேற்றுவது சுலபமான ஒன்றல்ல. அதுமட்டுமல்லாது, இப்பதிவினால் குத்தகைதாரர்கள் சொற்ப குத்தகை மட்டுமே அளிக்க வேண்டும். குத்தகைதாரர்களை நிலத்தை விட்டு வெளியேற்றுவது என்பது கிட்டத்தட்ட இயலாத ஒன்று. அவர்களுக்கு அவ்வளவு சட்ட பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. கோயில், மட நிர்வாகங்கள் அப்படியே பெரு முயற்சி எடுத்து நீதிமன்ற உத்தரவைப் பெற்றால்கூட ஒரு குத்தகைதாரரை வெளியேற்றுவதும், வேறு ஒருவரைக் குத்தகை தாரராக அமர்த்துவதும் இயலாத ஒன்று. சமுதாயத்தில் குத்தகைதாரர்களுக்கு உரிமை உண்டு என்பது நிறுவனமயப்படுத்தப்பட்டுவிட்டது. இதற்கு உழவடை பாத்தியம் என்று பெயர். சட்டங்கள் ஒருபுறம் இருந்தாலும் இந்த உழவடை பாத்தியம் நன்கு வேர்விட்டு வலுப்பெற்றுவிட்டது. இதன் விளைவாக குத்தகைதாரர்கள் வலுவான நிலையில் உள்ளனர்.

குத்தகைதாரர்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றப் படாமல் இருக்கச் சட்டம் பல வாய்ப்புகளை வழங்குகிறது. அதைவிடப் பெரிய பாதுகாப்பை வழங்குவது இந்த உழவடை பாத்தியம் தான். உழவடை பாத்தியம் குத்தகைதாரர்களுக்குச் சாகுபடி உரிமையை வழங்குகிறது. இந்தச் சாகுபடி உரிமையை அவர் விட்டுத்தர வேண்டுமென்றால் அவருக்கு இழப்பீடு வழங்க வேண்டும். குறைந்தபட்ச இழப்பீடு என்பது அவர் எவ்வளவு பரப்பில் குத்தகை விவசாயம் செய்கிறாரோ அதில் மூன்றில் ஒரு பகுதி. அவர் மூன்று ஏக்கரில் குத்தகைபயிர் செய்தால் ஓர் ஏக்கர் நிலத்தைப் பெற்றுக்கொண்டு மீதமுள்ள இரண்டு ஏக்கர் நிலத்தை உரிமையாளருக்குக் கொடுத்துவிடுவார். இதுதான் உழவடை பாத்தியம்.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

### சிறைவாசி தண்டனைக் குறைப்புகளின் முழு தகவல்களையும் வழங்க ஆணையர் உத்தரவு

# சிறைக்குள்ளே பேரறிவாளன் உறுதியுடன் நடத்தும் சட்டப் போராட்டங்கள்

ராஜீவ் கொலை வழக்கில் நீதி மன்றங்களால் நிரூபிக்க முடியாத குற்றச் சாட்டுகளுக்குப் பிறகும் 26 ஆண்டு களாக சிறைக் கம்பிகளுக்குள் இருந்து உறுதி தளராது சட்டப் போராட்டம் நடத்தி வருகிறார் பேரறிவாளன். டெல்லி அதிகார பீடத்தில் ஆட்சி மாற்றங்கள் நடந்தாலும் தங்கள் அதிகாரத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் பார்ப்பன அதிகார வர்க்கம், தனது முழுமையான அதிகாரச் செல் வாக்கையும் முறைகேடாகப் பயன் படுத்தி பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர் விடுதலைக்கு முட்டுக் கட்டைகளைப் போட்டு வருகிறது. இதன் உச்சகட்டமாக குடியரசுத் தலைவர் வழியாக இவர்களின் விடுதலைக்கான தடையைப் பெற்று உச்சநீதிமன்றத் தில் தாக்கல் செய்தது நடுவண் ஆட்சி.

நாட்டைக் கெடுத்ததே நேரு வின் குடும்பம் என்று பேசி வரும் பா.ஜ.க.வும், சங்பரிவாரங்களும் ராஜீவ் கொலைக் குற்றத்தில் நேரடி தொடர் பில்லாத சிறைவாசிகளின் விடுதலையை உறுதியாக மறுக்கின்றன என்றால் பார்ப்பன அதிகார வர்க்கம் ஆட்சிகளை தங்களின் பார்ப் பனிய திசையில் செலுத்திக் கொண்டிருக் கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

26 ஆண்டுகளாக சிறையில் வாடும் பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்கள் இப்போது சிறைவாசிகள். சிறைவாசி களுக்கான தண்டனை குறைப்புக்கான அணுகுமுறை, அவர்கள் செய்த குற்றங்கள் எத்தகையது என்று பார்க்கா மல், சிறையில் அவர்களின் நன்னடத்தை ஒன்றை மட்டுமே பார்ப்பதுதான். ஆனால் மோடி ஆட்சி, ராஜீவ் காந்தியைக் கொடூர மாகக் கொலை செய்தவர்களுக்கு மன்னிப்பே கிடையாது என்று பேசுவது, சிறை வாசிகள் விடுதலைக் குத் தொடர்பான கருத்தே அல்ல. காந்தி கொலையில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கோபால் கோட்சேயை 15 ஆண்டுகளில், அதுவும் காங்கிரஸ் ஆட்சியிலேயே விடுதலை செய்ததை மறந்துவிட முடியாது.

பேரறிவாளன் 2010 ஜனவரியி லிருந்து 2015 டிசம்பர் வரை பல்வேறு சிறை களில் தண்டனைக் குறைப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப் பட்ட சிறைவாசிகளின் முழு விவரங்களையும் தெரிவிக்குமாறு மத்திய உள்துறை அமைச்சகத்தின் தகவல் தொடர்பு அதிகாரியிடம் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் அடிப்படையில் கேட்டார். அந்த அதிகாரி தகவல் தர மறுத்து விட்டார். “இந்தப் பிரச்சினை நீதிமன்ற விசாரணையில் இருப்பதால் இது தொடர்பாக எந்தத் தகவலையும் தெரிவிக்க இயலாது” என்று அதிகாரி பதிலளித்தார். தலைமை தகவல் ஆணையருக்கு பேரறிவாளன் மேல் முறையீடு செய்தார். தலைமை ஆணையர் யஷோ வரதன் பிரசாத், தகவல் தொடர்பு அதிகாரி தந்த மறுப்பு ஏற்கக் கூடியதல்ல. இதில் தனது சிந்தனையைப் பயன்படுத்த அவர் தவறியிருக்கிறார். அவர் தந்துள்ள மறுப்பு குழப்பமானதாகவும் தெளிவற்ற தாகவும் உள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது என்ற காரணத்துக்குள் அதிகாரி பதுங்கிக் கொண்டுவிட்டார்.

“நீதிமன்ற வழக்கு விசாரணையில் இருப்பதாலேயே தகவல் தெரிவிக்க மறுக்கக் கூடாது என்று ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் விதி விலக்கு தரப்பட்ட பிரச்சினைகளைத் தவிர, வேறு எந்தப் பிரச்சினையிலும் தகவல் தெரிவிப் பதற்கு தடை இல்லை. நீதிமன்றமும் இப்படித் தகவல்களை வழங்கக் கூடாது என்று குறிப்பாக எதையும் தெரிவிக்கவும் இல்லை. எனவே அதிகாரியின் மறுப்பு, சட்டப்படி மிகவும் கேடானது” - என்று கூறியிருக்கிறார், ஆணையர்.

உள்துறை அமைச்சகம் 2010 லிருந்து 2015ஆம் ஆண்டு வரை தண்டனைக் குறைப்பு வழங்கப்பட்ட சிறைவாசிகளின் முழுமையான விவரங்களை அதன் இணையதளத்தில் பொது மக்கள் பார்வைக்கு வெளியிட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் விடுதலையை மறுத்த உச்சநீதிமன்ற ஆணையில் இது தாக்கத்தை ஏற்படுத்துமா என்ற கேள்விக்கு பதிலளிக்க மறுத்த ஆணையர், பொது நலன் என்ற கண்ணோட்டத்தில் இவை வெளிப்படையாக அனைவரும் அறிய வேண்டும் என்பதே நோக்கம் என்றார்.

அரசியல் சட்டத்தின் 72 மற்றும் 73ஆவது பிரிவு; அதேபோல் கிரிமினல் சட்டம் 432 மற்றும் 435ஆவது பிரிவுகள் அடிப்படையில் அரசு உருவாக்கி யுள்ள நடைமுறை விதிகள் இருந்தால் அதை வெளியிட வேண்டும். உச்சநீதி மன்றத்தில் சிறைவாசி முருகன் தனது விடுதலைக்காக தொடர்ந்த வழக்கில் இந்த விதிகள் பின்பற்றப்பட்டதா என்றும் பேரறிவாளன் கேட்டிருந்தார்.

பேரறிவாளன் உறுதியோடு தொடர்ந்து நடத்தி வரும் சட்டப் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி இது.

இதற்கிடையே ஆளுநருக்கு அரசியல் சாசனம் வழங்கியுள்ள 161ஆவது பிரிவின் கீழ் தன்னை விடுதலை செய்யுமாறு பேரறிவாளன்



உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் விசாரணைக்கு ஏற்று ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளனர். தமிழக ஆளுநரிடம் பேரறிவாளன் தனது விடுதலை கோரி தாக்கல் செய்த மனுவின் மீது இரண்டு ஆண்டுகளாக முடிவெடுக் கப்படாததால் பேரறிவாளனை விடுதலை செய்ய வேண்டும் என்று அவரது சார்பில் வழக்கறிஞர் கோபால் சங்கர நாராயணன் வாதாடினார்.

“கடந்த 24 ஆண்டுகளாக சிறையில் வாடி வருகிறேன். சிறைச்சாலை விதிப்படி ஆயுள் சிறை 20 ஆண்டுகள்தான். அதைத் தாண்டிய சிறைவாசிகள் விடுதலை கோர முடியும். அது தவிர, ராஜீவ் கொலை வழக்கில் ஆர்.டி.எக்ஸ் வெடி குண்டுகளை தயாரித்து கொலைக்கு முக்கிய காரணமாக அமைந்தவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. ஜெயின் ஆணையத்தின் அறிக்கையின் படி இந்தக் கொலையில் வெளி நாட்டு சதி அடங்கி உள்ளதா என்ற விசாரணையை சி.பி.அய். இன்னும் முடிக்கவில்லை” என்றும் அம் மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

விசாரணையை செப்டம்பர் 6ஆம் தேதிக்கு உச்சநீதிமன்றம் தள்ளி வைத்துள்ளது.

## சென்னையில் பரப்புரைப் பயண தொடக்க நிகழ்வு

“தமிழர் கல்வி உரிமை மீட்பு பரப்புரைப் பயணத்தின்” சென்னை மாவட்ட பரப்புரைக் குழு 20.08.2018 அன்று காலை 9.30 மணிக்கு இராயப்பேட்டை பகுதியில் உள்ள பெரியார் சிலைக்கு தோழர்கள் மாலை அணிவித்து பரப்புரைப் பயண முழக்கத்தோடு பயணத்தைத் தொடங்கினர். அதைத் தொடர்ந்து கிண்டி கத்திபாரா பகுதியில் உள்ள பெரியார் சிலைக்கு மா.வேழவேந்தன் (தென்சென்னை மாவட்டத் தலைவர்) மாலை அணிவித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

பயணத்தின் முதல் பரப்புரைப் பயணக் கூட்டம் நங்கநல்லூர் சுரங்க பாதை அருகே காலை 11 மணிக்கு “விரட்டு” கலைக் குழுவினரின் பறையிசை முழக்கத் தோடு தொடங்கப்பட்டது. அருள்தாஸ், தமிழர் உரிமை பாடல்களைப் பாடினார். இரண்டாவது கூட்டம் மடிப்பாக்கம் பேருந்து நிலையத்தில் மதியம் 12.30 மணிக்கு பரப்புரைப் பயணம் தொடங்கியது.

பரப்புரைப் பயண தோழர்களுக்கு நங்கநல்லூர் பகுதியை சார்ந்த குகனாந்தன் மதிய உணவை தோழர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார்.

பின்பு, மாலை 3 மணிக்கு பரப்புரைப் பயணம் கோவிலம்பாக்கம் பேருந்து நிறுத்தம் அருகில் ஆரம்பித்தது. முதல் நாளில் இறுதி பரப்புரையாக மாலை 5 மணிக்கு சேலையூர் பேருந்து நிறுத்தம் அருகே பரப்புரையை ஆரம்பித்தனர். சேலையூர் பகுதியில் இரவு தோழர்கள் தங்குவதற்கு பாவலர் பெருஞ்சித்தனாரின் மகன் பொழிலன் பெருஞ்சித்திரனார் தமிழர்களம் மண்டபத்தில் தங்க ஏற்பாடு செய்து கொடுத்தார். இரவு உணவு இயக்க ஆதரவாளர் பிரான்சிஸ் ஏற்பாடு செய்தார்.


முதல் நாள் பிரச்சாரப் பயணத்தில் ந. அய்யனார், இரா. உமாபதி, எட்வின் பிரபாகரன், பெரியார் யுவராஜ் ஆகியோர் பிரச்சாரப் பயண நோக்கத்தைக் குறித்து பேசினர்.

கலந்துகொண்டோர் : கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தென்சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, தலைமைக் குழு உறுப்பினர் ந. அய்யனார், தென்சென்னை மாவட்டத் தலைவர் மா. வேழவேந்தன், ப. அருண்குமார், யுவராஜ், கார்த்திக் இராஜேந்திரன், சுகுமார், எட்வின் பிரபாகரன், இராவணன், இரணியா, ஓவியா, தேன்ராஜ், அருண்குமார், பாஸ்கர், அருள்தாஸ், முரளி, மோகன், ஜேம்ஸ், இரவி பாரதி மற்றும் விரட்டுக் கலைக் குழுவினர்.


## பரப்புரைப் பயணத்தில் விற்பனையாகிறது கழகத்தின் புதிய வெளியீடுகள்!

**சலுகை விலையில் 6 புத்தகங்களின் தொகுப்பு ரூ.150/-**

1. இடஒதுக்கீடு உரிமைப் போராட்ட வரலாறு - கொளத்தூர் மணி
2. அம்பேத்கர்-காமராசர் ஒரு வரலாற்றுப் பார்வை - கொளத்தூர் மணி
3. கல்வி வேலை வாய்ப்புகளில் நடுவண் ஆட்சியின் உரிமைப் பறிப்பு
4. தமிழை இழிக்கும் வேத மரபு - விடுதலை இராசேந்திரன், வாலாசா வல்லவன்
5. மத்திய அரசு பணிகளில் தமிழர் உரிமைப் பறிப்பு - கு. அன்பு
6. காந்தியை சாய்த்த கோட்சேவின் குண்டுகள் - விடுதலை இராசேந்திரன்





Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 23rd August 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN